விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 25 சனிக்கிழமை (10.08.2002) தொலைபேசி 3378 ஒலி 234

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பி.ஜே.பர்னாண்டோ
இல. 542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## அரசின் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு

# பாராளுமன்றத்தை கலைக்கும் எண்ணம் அறவே கிடையாது!

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை

(நமது நிருபர்)

✡ மதத் தலைவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினராலும் வெளியிடப்பட்ட கருத்துக்களை கவனத்தில் கொண்டு எக்காரணம் கொண்டும் பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது.



✡ எனது அரசு அன்று முன்னெடுத்துச் சென்ற சமாதான நடவடிக்கைகளை தற்போதைய அரசு முன்னெடுத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

✡ நாட்டின் இறைமைக்கு ஆபத்து வருமானால் எனது நிறை வேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த தயங்கமாட்டேன்.

இவ்வாறு ஜனாதபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய விசேட உரையின் போது கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கும், அரசிற்கும் இடையில் எழுந்த முறுகல் நிலையை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது நிலைப்பாடு குறித்து நாட்டு மக்களுக்கு நேற்றிரவு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியும், அரசும் ஒரு கட்சியாகவே இருக்க வேண்டும்.

(07ம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் தயாரத்ன

(கொழும்பு)

இராணுவத் தரப்பு பேச்சாளராக பிரிகேடியர் தயாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் சனதகருணாரத்ன திருகோண மலையின் 22வது படையணியின் தளபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இந்த இரு நியமனங்களும் உடனடியாக அமுலுக்கு வருவதாக படைத் தலைமை அறிவித்துள்ளது. (ம)

## வருட இறுதிக்குள் யாழ். மாவட்டத்திற்கு 7000 தொலைபேசிகள்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் உள்ள தொலைபேசிப்பாவனையாளர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் 7 ஆயிரம் புதிய இணைப்புக்கள் வழங்கப்பட உள்ளதாக மக்கள் தொடர்

(08ம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்கக் கோரி இன்று மறியற்போர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியையும, யாழ். ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் பருத்தித்துறை வீதியை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறுகோரி இரு சந்திகளிலும் இன்று காலை 10மணி முதல் நண்பகல் 12மணிவரை அடையாள மறியற் போராட்டம் இடம்பெறவுள்ளது.

வலி தென்கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மறியற் போராட்டத்திற்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(த)

## அபிவிருத்திக் குழுக்கூட்டம் திட்டமிட்டபடி 12ந் திகதி

(திருநெல்வேலி)

திட்டமிட்டபடி எதிர்வரும் 12ம் திகதி யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெறும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

12ம் திகதி நடைபெறவுள்ள அபிவிருத்திக் குழுக்கூட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என யாழ். அரச அதிபருக்கு அமைச்சர் மகேஸ்வரன் கடிதம் அனுப்பியிருந்தார்.

இது தொடர்பாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் விரக்கோனிடம் தொடர்புகொண்டு கேட்ட போது அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை திட்டமிட்டபடி 12ம் திகதி யாழ் செயலகத்தில் நடத்துமாறு அவர் கூறியிருந்தார் என்றும் ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-43)

## புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார்

### வெளிவிவகார அமைச்சர் டிரோன் சென்னையில் தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இணக்கம் தெரி

இந்தியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு புதுடில்லியில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு நேற்றுக்

ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக

(சென்னை)
தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு புதுடில்லியில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு நேற்றுக் காலை சென்ற அமைச்சர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கான திகதி குறிப்பிடப்படும் பட்சத்தில் புலிகள் மீதான தடையை நீக்கி

(08ம் பக்கம் பார்க்க)

12ம் திகதி நடைபெறவுள்ள அபிவிருத்திக் குழுக்கூட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என யாழ் அரச அதிபருக்கு

கத்தில் நடத்துமாறு அவர் கூறியிருந்தார் என்றும் ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-43)

# வை.கோவின் வீட்டிலிருந்து தலைவர் பிரபாவின் படம் மீட்பு

(சென்னை)
ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோபாலசாமியின் சென்னை மற்றும கலிங்கப்பட்டியிலுள்ள வீடுகளில் தேடுதலை மேற்கொண்ட தமிழகப் பொலிஸார், வை.கோபாலசாமி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் எடுத்துக்கொண்ட புகைப் படம், மாத்தையா, குட்டிமணி ஆகியோரது புகைப்படங்கள் மற்றும் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கான காரணங்கள் அடங்கிய புத்தகங்கள் சிலவற்றையும் அங்கிருந்து மீட்டுள்ளனர்.

இதேவேளை ம.தி.மு.கவின் அலுவலகத்தில் தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் அங்கிருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான எந்தத் தடயங்களையும் மீட்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (த)

# வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதியினை மக்கள் பாவனைக்கு திறந்துவிடும்படி கோரி இன்று நடைபெறவுள்ள மறியற் போராட்டத்திற்கு சகல வர்த்தகர்களையும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

# ஜனாதிபதியை புண்படுத்தும் வகையில்செயற்படக்கூடாது

## அமைச்சர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தல்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை புண்படுத்தும் வகையிலோ, அதிருப்தி அடையச் செய்யும் வகையிலோ அமைச்சர்கள் நடந்துகொள்ளக்கூடாதென பிரதமர் ரணில் விக்ரமசிங்கா தனது அமைச்சரவைச்சகாக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்குமிடையிலான நல்லுறவை பாதிக்கக்கூடிய வகையில் அண்மைக்காலமாக ஒருசில அமைச்சர்கள் நடந்துகொண்டமுறை தொடர்பாகவே பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா இந்த அறிவுறுத்தலை அமைச்சர்களுக்கு வழங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

(ம)


ஹற்றன் நஷனல்

சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் திட்டம்

கடன் வழங்கும் நோக்கங்கள்

- சிறுதொழில் தொடங்குதல்
- பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல்
- விவசாயத்திற்காக – குறுங்கால, நடுத்தரகால கடன்கள்.
- கால்நடை வளர்ப்பு
- வேறு சுயதொழில்கள்

மேலதிக விபரங்களுக்கு
HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலைபேசி: 021-2787, 021-3463
தொலைநகல்: 021-3194

சிறு விளம்பரம்

**வகுப்புக்கள்**

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்த ஆசிரியர்கள வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன், ஆங்கிலத்தில் கூடிய சவனமும், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(5715)


# பாதுகாப்பு என்ற பேரில் வீதிகளை மூடுவது அதிகார துஷ்பிரயோகமே

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் உருவாகி 5 மாதங்கள் கடந்துவிட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இராணுவக் கெடுபிடிகளற்ற இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதன் மூலம், பேச்சுவார்த்தைக்கான தகுந்தவோர் சூழலை உருவாக்குவதாகும்.

ஆனால் சிறிலங்கா இராணுவம் இன்னுமொரு யுத்தத்திற்குத் தன்னை தயார்படுத்தும் வகையில், புதிய உயர் பாதுகாப்பு வலயங்களையும், புதிய பாதுகாப்பு அரண்களையும் உருவாக்கிவருகின்றது இது யுத்தநிறுத்தத்தின் மீது இராணுவத்துக்குள்ள நம்பிக்கையீனத்தையே காட்டுகின்றது.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்எவ். (சுரேஷ் அணி) இன் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

யாழ்ப்பாணத்தின் முக்கிய மூன்று போக்குவரத்து வீதிகள் மூடப்பட்டு மக்களின் போக்குவரத்தை தடைசெய்துள்ளதானது மிகவும் கண்டிக்கத்தக்கது யாழ்நகரின் மையப்புள்ளியை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக்கூறி, போக்கு வரத்தைத் தடைசெய்து, தமது பாதுகாப்பை பலப்படுத்துகின்றோம் எனக்கூறுவது, இராணுவ அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகம் என்றுதான் கூறவேண்டும்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு போக்குவரத்து ஆகிய சகலவற்றையும் ஒழுங்கு படுத்த வேண்டியவர்கள் அதற்கு எதிராக செயல்படுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இதனடிப்படையில் யாழ் மனிதநேய அமைப்புகள் யாழ் நகரத்தில் மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறக்குமாறு, இராணுவத் தரப்பிடம் கோரி இருந்தது ஆனால் இன்றுவரை இவ்வீதி திறக்காததால் நாம் எமது எதிர்ப்பை அவர்களுக்குக் காட்ட வேண்டியவர்களாக உள்ளோம். இராணுவத்தின் இந்தநடவடிக்கைகளை கண்டித்தும், பாதைகளைத் திறக்குமாறு கோரியும் நாளை நடக்கவிருக்கும் மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்களை அன்புடன் அழைக்கின்றோம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# திங்களன்று செயலகம் முன் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

தமது பிள்ளைகள் குறித்த உறுதியும் இறுதியுமான முடிவை அறிவிக்கக் கோரியும் இது தொடர்பில் இற்றைவரை தம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை பல்வேறு காரணங்களைக் கூறி முறியடித்தமை ஆகியவற்றைக் கண்டித்துமே இம்மறியல் போராட்டம் இடம்பெறவுள்ளது. (உ)

# இம்மாத இறுதியில் சாரதி அனுமதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திர பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கையளித்தோர் மற்றும் அப்பரீட்சையில் சித்தியடையத் தவறியோர் அப் பரீட்சைக்கு தோற்றத்தவறியோர் ஆகியோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையானது இம்மாதஇறுதியில் இடம்பெறவுளளதாக யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பரீட்சைக்கு தோற்றத் தவறியோருக்கான பரீட்சையும் மீண்டும் இம்மாத இறுதியில் இடம் பெறவுள ளதாக யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துளளது.

(உ-6)

# க. பொ. த (உ|த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல்மாதம் நடைபெற்று முடிந்த க. பொ. த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. யாழ். மாவட்ட பாடசாலைகள் சிலவற்றின் முன்னணிப் பெறுபேறுகள வருமாறு:

**உடுவில் மகளிர் கல்லூரி**

வர்த்தகம்

| | |
|---|---|
| செ. தர்மினி- | 3ஏ |
| ஜெ. அசித்தா | ஏ, 2பி |
| ச. தர்மினி | ஏ, 2பி |

கலை

த. வசந்தகுமாரி 3ஏ கு. தயாளினி- 3ஏ, ம. யசோதினி 2ஏபி, யோ. பரதிகா- 2ஏசி, செ.சர்மிளா- 2ஏபி ஸ்ரீவாசுகி ஏ 2பி, ஸ்ரீ ஸ்ரீகௌதமி ஏ2பி, ஐ. உஷாநந்தினி- ஏபிசி.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

வர்த்தகம்

ஆர். நாகவரன்3ஏ, ஆர். பிரகாஷ்- ஏபிசி, எம். சுகிர்தா ஏ2சி, எம். துர்க்காயினி 2பிசி, கே. கஜேந்திரன்- பி2சி

கலை

| | |
|---|---|
| வி ஜாமினி- | ஏபிசி, |
| எஸ். செந்தீபன் | ஏபிசி, |
| எம். நிகிலா | 2பிசி, |
| என். குமுதினி | 2பிசி, |
| ரி. லோஜினி 2பிசி | |

(த)

# போராட்டங்கள் மூலம் உரிமைகளை வென்றெடுக்க மீனவர்கள் தீர்மானம்

(திருநெல்வேலி)

குடநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்மாவட்ட கடற்றெழிலாளர் சமாச ஏற்பாட்டில் நேற்று உயர்மட்ட மாநாடுஒன்று சமாச அலுவலகத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகள் கடற்றெழிலாளர் சமாசத் தலைவர், கடற்றொழில் திணைக்களத் தலைவர்கள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 160நாட்கள்கடந்த நிலையிலும் தற்போதும் பல இடங்களில் பாஸ் கெடுபிடிகளும் மீன்பிடிக்க கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவது குறித்து மீனவப்பிரதிநிதிகள் கவலைவெளியிட்டனர்.

இதுதொடர்பாக ஏனைய மீனவப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடி மீனவர் உரிமைப் போராட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டதுடன் மீனவர் அடையாள அட்டைவிவகாரம் தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது

குடாநாட்டில் பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் இருந்தும் அடையாள அட்டைக்குரிய 2ஆயிரம் விண்ணப்ப படிவங்களே அனுப்பப்பட்டுள்ளன இவை வடமராட்சியின் ஒருபகுதிக்கு மட்டுமே போதுமானது ஏனைய பகுதிக்கு இல்லாது உள்ளமை குறித்து அதிருப்தி வெளியிடப்பட்டது.

இது விடயங்களை கடற்றொழிலாளர் திணைக்களங்கள் ஊடாக கடற்றொழில் அமைச்சிற்கு தெரியப்படுத்துவது எனவும தீர்மானம் எடுக்கப்பட்டது (உ-43,6)

## பாராளுமன்றத்தை

பாதுகாப்புக் கருதி என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை ஒருபோதும் கைவிடமாட்டேன.

நாடு பொருளாதார நெருக்கடியில்சிக்கியுள்ள இவ்வேளையில் எக்காரணம் கொண்டும் பாராளுமன்றத்தைக் கலைத்து ஒரு பொதுத் தேர்தலைநடத்தநான்ஒருபோதும் இணங்கமாட்டேன் என்றும் ஜனாதிபதி தனது உரையில் வலியுறுத்திக் கூறினார்.

(ம)

# 23வரை விளக்க மறியல்

(கொழும்பு)

உடத்தலவின்ன 10முஸ்லிம் இளைஞர்களின் படுகொலை தொடர்பான சந்தேக நபர்கள் அனைவரையும் எதிர்வரும் 23ந்திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய பதில்நீதிவான் ஏ.ரி,மடுவல்ல உத்தரவிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் அனுருத்த ரத்வத்தைக்கும் அவரது இருபுதல்வர் உட்பட 8பேருக்குகே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(உ-8)

# ஆபரணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலகத்தில் தங்க ஆபரணம்ஒன்றும் சின்னப்பு நடராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு பிரதேசசெயலக காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

(ந-5)


# அறிவித்தல்

**நெற்செய்கையை மேற்கொள்ளும் சிறிய கமக்காரர்களுக்கு**

**விவசாய உதவி முத்திரை வழங்கல்**

விவசாயப் பெருமக்களே!

விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கால் ($\frac{1}{4}$) ஏக்கர் தொடக்கம 3) ஏக்கர் வரை நெற்செய்கையை 2002/2003 காலபோகத்தில் மேற்கொள்ளும் சிறிய கமக்காரர்களுக்கு யூரியா உரம் பெறுவதற்கான விவசாய உதவி முத்திரை விநியோகம் எமது திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது இத்திட்டத்தின் கீழ் நெற்செயகையை மேற்கொள்ளும் இருப்பாட்சியாளர்கள் மட்டும்இவ் உதவியைபெறுவதன் பொருட்டு கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களைத் தமதுபகுதி விவசாய அமைப்பின் மூலமாகப் பெற்று அமைப்பின் பரிந்துரையுடன் உரிய படிவத்தை 20.08.2002ம் திகதிக்கு முன்னர் கமநல சேவை நிலையங்களில் ஒப்படைத்துவிவசாய உதவி முத்திரையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். இது தொடர்பான மேலதிகவிபரங்கள்தேவைப்படின் தங்கள் பகுதி பெரும்பாக உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

க. சுந்தரேசன்

உதவி ஆணையாளர்
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
யாழ் மாவட்டம்

(கி—4838)


# 92 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட க. பொ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியோரின் 92 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ எம். ஆர். பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கு 2இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தோற்றியுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 927 பேர் மூன்றுபாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

அகில இலங்கை ரீதியாக உயிரியல் விஞ்ஞானத்தில் முதலிடத்தை தகண்டி மஹாநாம மகளிர்பாடசாலையை சேர்ந்த தெனாலி சுதந்திஜாப்ப குணதிலக பெற்றுள்ளார். இதே பாடசாலை மாணவியே வர்த்தகத் துறையில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

கணிதப் பிரிவில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியை சேர்ந்த வேதலிங்கம் ஜனார்த்தனன் முதலாம் இடத்தையும், கலைப்பிரிவில் கொழும்பு விசாக்கா வித்தியாலய மாணவியும் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடங்களை பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 28 மாணவர்களே 3 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் 22பேர் யாழ். நகரப்பாடசாலைகளை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# இஸற் ஸ்கோரால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்

# இறக்கும்வரை உண்ணாவிரதமிருக்க முடிவு

(கொழும்பு)

2001 க.பொ.த (உ/த) உயிரியல் மாணவர்களும், பெற்றோர்களும் பல்கலைக்கழக மானியக்குழு அலுவலகத்தின் முன் கடந்த செவ்வாய்க்கிழமைதொடக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2001 ஓகஸ்ட்மாதம் நான்கு பாடங்களுக்குத் தோற்றிய இவர்கள் முன்னைய தெரிவு முறைப்படி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படுவதற்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றவர்களாவர்.

முன்னைய பல்கலைக்கழக அனுமதி முறையின்படி இவர்கள் மருத்துவபீடத்திற்கு செல்லமுடியும். ஆனால் இஸற்ஸ்கோர் முறையில் 305 மொத்தப்புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு மருத்துவபீட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட குறைந்த புள்ளிகளை எடுத்தவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இஸற்ஸ்கோர் முறையில் மதிப்பீடுசெய்வது நியாயமானதல்ல. தமக்கு மொத்தப்புள்ளிகளினடிப்படையில் அனுமதி வழங்கவேண்டுமென இவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும், நமக்கு நீதிகிடைக்கும்வரை போராடப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனந்தா, நாலந்தா, விசாகா, சாந்தபெனடிக்ற் போன்ற கல்லூரிகளின் மாணவர்களுடன் கண்டி, காலி, மாத்தறை மாவட்ட மாணவர்களும் இதில் இணையவுள்ளனர்.

இதேவேளை, 11 மாணவர்கள் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கெதிராக தாக்கல் செய்திருந்த வழக்கு இன்னும் விசாரணை முடியாதநிலையிலுள்ளது உயர்கல்விஅமைச்சர் கபிர்ஹாசிம் நியமித்த குழுவும் இன்னும் அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. ஓரிரு நாட்களில் சமர்ப்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## குற்றப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனைசெய்த ஆடியபாதம் வீதியைச் சேர்ந்தநபர்ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். மாவட்டநீதிமன்றத்தில் நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் கடந்த புதன்கிழமை ஆஜர் செய்யப்பட்டபோது,

குற்றத்தை ஒப்புக்கொண்ட தன் பேரில் சம்பந்தப்பட்ட நபரிடம் குற்றப்பணமாக 10 ஆயிரம் ரூபாவும் தர்மப் பணமாக 2 ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டது.

சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை செய்தமைதொடர்பாக இவரிடம் இருந்து இரண்டு முறை நீதிமன்றத்தினால் குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

# மாவட்ட மட்ட போட்டிகளுக்கு மாணவர்களைத் தெரிவதில்குளறுபடி

## வடமராட்சி வலயத்தில் இடம் பெறுகிறதாம்

(மந்திகை)

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன.

கடந்த செவ்வாயன்று வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற வடமராட்சி வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அப்பகுதி கிராம அலுவலர் ஒருவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மாவட்ட மட்டத்தில் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் தமிழ்மொழித் தினப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளின் போது நடுவர்கள் தமக்கு வேண்டியவர்களை தெரிவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்களின் உறவினர்கள் போட்டிக்கானநடுவர்களாகத் தெரிவு செய்யப்படுவதாலேயே இவ்வாறான குளறுபடிகள் நிகழ்வதாகவும்,

திறமையான மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படும் சம்பவங்கள இடம்பெறுவதாகவும்சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை, இவ்வாறு முறைகேடாகத் தெரியப்படும் திறமை குறைந்த மாணவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளுக்குச்சென்றுதோல்வியைத் தழுவுவது குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. (உ-23)

## ஸ்ரீகாயத்திரி ஓமம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் தலைமையில் நாட்டின சமாதானம், சாந்தி, சுபீட்சம் கிடைக்க வேண்டி ஸ்ரீ காயத்திரி ஓமம் நடைபெறவுள்ளது. (ஷ)

இரகசிய பேச்சு வார்த்தை விவகாரம்

## பொ.ஐ.மு கூட்டத்தில் பலத்த வாக்கு வாதம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 5 எம்பிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இரகசியப்பேச்சுவார்த்தை நடத்திய விடயம் அம்பலத்துக்கு வந்ததையடுத்து நேற்றுமுன் தினம் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வுடன் இரகசியப் பேச்சுக்கள் நடத்திய 5 எம்பிகளிடமும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இது குறித்துவிளக்கம் கோரியுள்ளதாகவும்.

அதற்குஅவர்கள் தனிப்பட்ட பேச்சுவார்த்தை ஒன்றையே ரணிலுடன் தாம் நடத்தியதாகத் தெரிவித்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (ம)

# ஓடிக்கொண்டிருந்தவானில் தங்கச் சங்கிலி திருடப்பட்டது

(கலவயல்)

ஓடிக்கொண்டிருந்தவானுக்குள் பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலி ஒன்று லாவகமாகத் திருடப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்துகொண்டிருந்த வானிலேயேஇத்துணிகரத் திருட்டுச் சம்பவம்இடம் பெற்றுள்ளது.

தனக்கு இரு மருங்கிலும் இரு இளம் பெண்பிள்ளைகள் நெருங்கிஉட்கார்ந்திருந்தாதகவும் அவர்களே இத்திருட்டை மேற்கொண்டிருக்கக் கூடும் என்றும் அப்பெண்மணி கூறினார். (ஷ'111)

## கொழும்புத்துறையில் திருட்டு அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் திருடர் தமது கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் போல் வீடுகளைப் பார்க்க வரும் திருடர்களால் வீட்டு ஓடுகள், நிலைகள், யன்னல்கள் என்பன திருடப்பட்டு வருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் வீட்டு நிலை திருடிய ஒருவர் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு கள்வன் என்ற அட்டையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டமை தெரிந்ததே. (ஷ-262)

பாடசாலைகளில் பணியாற்றிய

# தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றிய 22 பேருக்கு 01. 10. 2001 முதல்நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலைகளில் நிரந்தர நியமனம் பெறும் பணியாளர்களின் பெயர்கள் வருமாறு,

கே. முருகேசு (உரும்பிராய் இந்துக்கல்லூரி), வி. பிரபாகர், கே. நந்தகுமார் (யா- இந்துக்கல்லூரி) பி. மெய்யழகன் (யா- மத்தியகல்லூரி), க. புஸ்பராசா (புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) ந. நவநிலவன், க. ஸ்ரீமோகன், ந. இராஜமோகன் (கொழும்புத்துறைஇந்துக் கல்லூரி), சூ. இருதயராஜா (செங்குந்த இந்துக்கல்லூரி) சு. வரப்பிரகாசம்(கோண்டாவில் இராமகிருஷ்ணவித்தி.) ப. நிரஞ்சன், (கொக்குவில் ஞானப்பிரகாச வித்தி.) சூ. சகாஜராஜா (புனித மரியாள் வித்தி.), ச. நாகேந்திரன், அ. அருள்ஜெயரட்ணம் (யாழ். இந்துக்கல்லூரி), வை. ஜெயரட்ணம்(வைத்தீஸ்வரக் கல்லூரி)ச. அருந்துரை (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க. பஞ்சமூர்த்தி (இடைக்காடு மகாவித்தி), த.சுப்பிரமணியம்(அச்சுவேலி மத்தியகல்லூரி), சே.மோகன்ராஜ்(கொக்குவில்இந்துக் கல்லூரி), ஆ. ஞானப்பிரகாசம் (திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலை)சி. நவரத்தினம் (புத்தூர்சோமஸ்கந்தக் கல்லூரி), சி.சண்முகநாதன்(கோப்பாய் சரவணபவானந்தாவித்தி.). உ 6)

# தச்சனாமடு படுகொலை மேலும் இருவர் கைது

(மன்னார்)

மன்னார் தச்சனாமடு படுகொலைகள் தொடர்பாக மேலும் இரு சந்தேக நபர்கள் வவுனியா பொலிஸாரினால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை இம்மாதம் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர்களின் தேசிய அடையாள அட்டை, அவர்கள் பயன்படுத்திய வான், கொலைக்கு பயன்படுத்திய நைலோன் கயிறு, வெள்ளிக்கத்தி முதலான தடயப்பொருட்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து பெற்றுத்தருமாறு பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிவானிடம் கோரியுள்ளனர்.

பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் அத்தடயப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அல்லது கண்காணிப்புக் குழு மூலமாக பெற்றுக் கொள்ளுமாறு பணித்துள்ளார். (ம)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

'சாவகச்சேரி டச்வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணிக்கு ஆலய முன்றலில், தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

பொருட்கள் இறக்குமதியாளர் அனைவருக்குமான ஒன்றுகூடல் இன்று மு.ப.10.00 மணிக்கு பளையில்உள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் அனைத்து இறககுமதியாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.(உ)

சங்கிலியை அறுத்துக்கொண்டு

# தப்பியோடிய பெண் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

(கல்வயல்)

பெண்ணெவரின் கழுத்திலிருந்த தங்கச்சங்லியை அறுத்துக் கொண்டு ஓட முனைந்த இன்னொரு பெண் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தின் மேற்குப் புறமாக உள்ள வைரவர் கோவிலுக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

அன்றைய தினம் இலங்கை போக்கு வரத்துச்சபை ஊழியர்களின் திடீர் வேலை நிறுத்தத்தினால் சிற்றூர்திகளில் முண்டி அடித்துக்கொண்டு பயணிகள் ஏற முற்பட்டதால் இப்பகுதியில் மக்கள் கூட்டம் அதிகரித்திருந்தது. இச்சந்தர்ப்பத்திலேயே இத்திருட்டு இடம்பெற்றது.

மடக்கிப்பிடிக்கப்பட்ட பிரஸ்தாப பெண் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். (ஷ-111)

(தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் கொடியேற்றம் இன்று)

### மாநிலத் தாயவளின் திருவிழா

தேவி துர்க்கை கோயிலிலே திருவிழா:-இந்தத்
தெல்லிநகர் வீதியெங்கும் திருவிழா!
காவல் தெய்வம் கொற்றவையின் திருவிழா! எங்கள்
கன்னித் தெய்வ அன்னையவள் திருவிழா!

அன்னமிடும் ஆச்சிகோயில் திருவிழா! யார்க்கும்
ஆறுதலைத் தருபவளின் திருவிழா!
பொன்சொரியும்கண்மணியாள் திருவிழா! எங்கும்
புன்மை தீர்த்துப் புதுமைசெய்வாள் திருவிழா!

காவடிகள் ஆடிவரும் திருவிழா! எங்கும்
கற்பூர ஜோதி பொங்கும் திருவிழா!
பாவடிவில் நடமிடுவாள் திருவிழா! சிறு
பாலகர்க்கும் முதியவர்க்கும் திருவிழா!

எங்கும் நிறை சங்கரியின் திருவிழா! பண்
இசைகலந்த மென்மொழியாள் திருவிழா!
மங்களங்கள் தருபவளின் திருவிழா; இந்த
மாநிலத்தின் தாயவளின் திருவிழா!

நிவேதிதா.

# பொன்விழா

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் இ. சசிகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளின் முதல் நாளான இன்று மாலை 4.30 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட இருமாடிக கட்டப் திறப்புவிழா இடம் பெறும். இக்கட்டத்தை இன்றைய தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணம் மேலதிக அரசங்க அதிபர் து. வைத்திலிங்கம் திறந்துவைக்கவுள்ளார்.

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நாளைய நிழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை இறுதி நாள் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொளவர். (ஷ-120)

## பிரதமர் - ஜனாதிபதி இடையிலான
# நீயா? நானா? போட்டியை முடிவுக்கு
# கொண்டுவர வெளிநாடுகள் சில முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும்இடையே ஏற்பட்டுள்ள நீயா? நானா? என்ற அரசியல் இழுபறி நிலை தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகள ஆழ்ந்த கவலை வெளியிட்டுளளதுடன் இருதரப்பினரையும் சந்தித்துப் பேசியும் வருகின்றனர்.

அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியினால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியினால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் காலதாமதமாகி வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகமுன்னாள் அமைச்சரும் தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பியுமான லக்ஷ்மன் கதிர்காமரையும் தற்போதைய அமைச்சர் மிலிந்த மொறகொடவையும் சந்தித்துப் பேசி இருதரப்பினரும் முறுகல் நிலையை கைவிடவேண்டும் என்று கனடா தூதுவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இதேவேளைஅவுஸ்ரேலியா தூதுவரும், முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளையை சந்தித்து இது தொடர்பில் பேசியுள்ளார். தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களும் அரசும் ஜனாதிபதியும் முறுகல் நிலையைக் கைவிட்டு சமாதான முயற்சியில் ஈடுபட வேண்டும் என இருசாராரையும் கேட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் புதிய தேர்தல் இடம் பெற்றால் சமாதான முயற்சிகள் தடம் புரளும் என்று அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே அனுசரணையாளராகச் செயற்படும்நோர்வே எச்சரித்துள்ளது. (ம)

# தீவக வலய சமூகக்கல்வி போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தினால் கடந்த 2002. 07. 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யா/புனித அந்தோனியார் கல்லூரியில் நடத்தப்பட்ட சமூககக்கல்வி பொது அறிவுப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர் பற்றிய விபரங்களும், ஆக்கக் கண்காட்சிப் போட்டியில் முதல்ஐந்து இடங்களைப் பெற்ற பாடசாலை விபரங்களும் கீழே தரப்படுகின்றன.

இந்த ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களும், பாடசாலைகளும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபெறத் தகுதி பெற்றுள்ளன.

பொது அறிவுப் போட்டி
(தரம்:- 6. - 7. பிரிவு)

க. தனஞ்செயன்- நெடுந்தீவு மகா வத்தி, ம. சாமபவி- யாழ்ற்ரன் கல்லூரி, வே. தேவகுமாரி- கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி., இ. விமலன- நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தி, ச. சங்கீதா- நயினாதீவு மகா வித்தி.

(தரம்:- 8. - 9 பிரிவு)

த. சஜீவா- நயின தீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்து, றஜனிதா- யழ்ற்ரன் கல்லூரி, மு. அபூஜிகாத்- நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்து, கு. ஜெயாகரன்- நெடுந்தீவு மகா வித்தி, சி ஐங்கரன் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.
(தரம் 10-11 பிரிவு)

ஜி. அருள் பிரதீபன் புனித அநதோனியார் கல்லூரி. வீ. புஸ்பராஜா- நயினாதீவு மகா வித்தி, து. பவிதா- கலாநிதி ஆ. தியாகராசாம.ம. வித்தி, கு தர்மகுமார்-நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி, அ. நிசாந்தன்- சேர். வை. துரைச்சுவாமி ம.ம. வித்தி.

(தரம் 12-13 பிரிவு)

ப. சர்மிளா- நயினாதீவு மகா வித்தி, ப. குகப்பிரியா- நயினாதீவு மகா வித்தி. யோ. ஜமுனாரஞ்சினி- நெடுந்தீவு சைவப்பிரகாச ம. வித்தி, எஸ். சிவரதி- கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தி, ம. துலிப்கஸ்பார்- நெடுந்தீவு மகா வித்தி.

ஆக்கக் கண்காட்சிப் போட்டி

சஞ்சிகை - நயினாதீவு மகா வித்தி, சஞ்சிகை- கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி, மொழி பண்பாடு- புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியமகளிர்வித்தி, சஞ்சிகை- நெடுந்தீவு மகா வித்தி, சார்க்நாடுகள-புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தி.

சித்திரம்- ஓவியம்-
நில வரை படம்- புகைப்படம்

நகரங்கள், வரலாற்றுச் சின்னங்கள்- கரம்பொன் சண்முகநாத மகா வித்தி, வரலாற்றுப் புகைப் படங்கள- கரம்பென் சண்முகநாத மகா வித்தி, இலங்கையின் மாவட்டங்கள்- நெடுந்தீவு மகா வித்தி.

சீனப் பெருஞ்சுவர் - புனித அந்தோனியாா கல்லூரி, சந்திரவட்டக்கல்-கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.,

செதுக்கு வேலை- மாதிரி உருக்கள

பாடசாலைச் சின்னம்- காரை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.,

தரைத்தோற்ற உருவம்- புங்குடுதீவு மகாவித்தி., தேசப்பட உருவங்கள் - வேலணை மேற்கு நடராசா வித்தி.,

மரியாள் ஆலயம் - புனித அந்தோனியாா கல்லூரி, தரைத்தோற்ற உருவம் - நயினதீவு ஸ்ரீகணேசா கனிஸ்ட வித்தி.,

வரலாற்றுக் குறிப்புகள்

தேசப்பட உருவங்கள் - வேலணை மேற்கு நடராசா வித்தி.,

புதிய தொழில்நுட்ப ஆக்கங்கள்

சூழல் மாசடைதல் - வேலணை மேற்கு நடராசா வித்தி., பூகோளம் - கரம்பொன் சிறுய புஸ்பம் மகளிர் வித்தி , குளத்தின் அமைப்பு- கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.,

எரிமலை - கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி. இலங்கையின் கைத்தொழில்கள் -வேலணை மேற்கு நடராசா வித்தி.,

மேலே குறிப்பிட்டபோட்டியாளர்களுக்கான மாகாண மட்டப்போட்டி வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஆக்கக்கண்காட்சிப் போட்டியாளர்கள் அல்லது குழுவினரது பெயர்ப்பட்டியலை மாகாண மட்டப் போட்டிக்கு விண்ணப்பிப்பதற்காக உடனடியாக தீவக வலயப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தும்பளையில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன

(மந்திகை)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளைஅகற்றும் பணியில் கடந்த சனி முதல் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

மேற்படி பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் வெளியேறி மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்த நிலையிலும் மிதிவெடிகள் அகற்றப்படாது இருப்பதனால் பொதுமக்கள் அனுபவிக்கும் இன்னல்கள்குறித்து பல தடவைகள் அரசுக்குசுட்டிக்காட்டப்பட்டதன் பேரில்இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை தொடர்க்கம் வல்லிபுரப்பகுதிவரை புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளே தற்போது அகற்றப்படுவதாகவும், பணி முடிவடைய சுமார் ஒருமாத காலம் எடுக்கும்எனவும் இப் பணியில் ஈடுபட்டுள்ள முள்ளியில் அமைந்துள்ள 52வது படையணியின் இராணுவ மிதிவெடிஅகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்பகுதியில் இதுவரை3 பேர்மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளமையும் 200 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-23)

## கலந்துரையாடலும் அங்குரார்ப்பணமும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச்சங்க படையணிகளில் அங்கம்வகிக்கும் பாடசாலை மாணவர்களுக்கான நல்லூர் கந்தன் ஆலய திருவிழா தொடர்பான கலந்துரையாடலும் புதிய விசேட படையணி 5 ஆம் பிரிவு மாணவர்களின் அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று பி.ப. 2 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## கற்கோவளப் பகுதி
# இளைப்பாறு மண்டபத்தை புனரமைக்க கோரிக்கை

(மந்திகை)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இராணுவத்தினருடைய பாவனையிலிருந்தபோது சேதமடைந்த மீனவர் இளைப்பாறு மண்டபத்தினை மீளப்புனரமைத்துத்தருமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது

இராணுவத்தினருடைய பாவனையில்இருந்த இவ் இளைப்பாற்று மண்டபம் சேதமடைந்துள்ளமையால் ஆழ்கடல்மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தொழிலை செய்துவிட்டு ஓய்வெடுக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (ஷ-23)

# மீள ஆரம்பம்

(கொழும்புத்துறை)

கடந்த ஒரு வருட காலமாக இயங்காதிருந்த நாவாந்துறை கத்தோலிக்கஇளைஞர் ஒன்றியம் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரெத்தினம் அடிகளார் தலைமையில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டதோடு,

இளைஞர்ஒன்றிய வேலைப்பாடுகளை கொண்டு நடத்துவதற்கு புதிய நிர்வாக சபை ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (உ-262)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட் கிழமை உரும்பிராய் ஊரெழுப்பகுதிகளில்கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளதால், அன்றைய தினம்வளர்ப்புநாய்களை வீடுகளில் கட்டிவைத்து ஒத்துழைக்குமாறு அப்பகுதிக் குடியிருப்பாளர்களை வலிகிழக்கு பிரதேசசபை கேட்டுள்ளது. (உ)

# இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் தேவஸ்தான தேர் உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

மாலை அம்மன் உள்வீதி, வெளிவீதி வலம் வரும் நிகழ்வும் 'பெரியபுராணம்' தெய்வீகப் பேருரையும் இடம் பெறும். (ஷ

# பஸ் மோதி மாணவி பலி

(நீர்கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் பாடசாலைக்கு சைக்கிளில் சென்ற மாணவி ஒருவரை பஸ் மோதியதில் மாணவி ஸ்தலத்திலேயே பலியானார்.

அண்மையில் நடைபெற்ற இச் சம்பவத்தின் போது ஆண்டு ஒன்பதில் கல்வி கற்கும் 13 வயது மாணவிஒருத்தி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றி வந்த பஸ்ஸின் சில்லுகள் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மாணவி மீது ஏறியதில் மாணவி ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து பஸ் சாரதி அங்கு கூடிய பொதுமக்களினால் நையப் புடைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# களவாடிய வாகனங்கள் வடக்கில் விற்பனை

## வவு. மாவட்ட நீதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் கொள்ளையிடப்படும் வாகனங்கள் வடக்கில் களவாக விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வாகனங்களை வாங்கும் போது எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் எச்சரித்துள்ளார்.

வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எவராயினும் வாகனம் ஒன்றை வாங்கும்போது வாகனத்திற்குஉரிய அனைத்து ஆவணங்களையும் கவனமாகப் பரிசீலனை செய்து வாங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாகனம் ஒன்றை கொள்வனவு செய்தபின் அதற்குரிய ஆவணங்கள் எவையேனும் பொய்யானதாக இருபபது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த வாகனத்தை வாங்கியவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# தென்னிலங்கைமட்பாண்டம் யாழில் அமோக விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது தென்னிலங்கை மட்பாண்டங்களுக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் பெரும்பான்மை இன வியாபாரிகளால் விற்கப்படும் மட்பாண்டங்களை மக்கள் அதிகம் விரும்பிக் கொள்வனவு செய்வதைக்காணக்கூடியதாகவுள்ளது.

போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருந்த காலத்தில் யாழில் மட்பாண்டங்களுக்கும் தட்டுப்பாடு நிலவியமை குறிப்பிடத்தக்கது. (ஷ-19)

# இன்று ஒரு தகவல்

## காந்த சக்தி சிகிச்சை

எகிப்து நாட்டு அழகி கிளியோபாட்ரா ஒருகாந்தக் கம்பியை எடுத்துத் தன்னுடைய தலையில் கட்டிக்கொள்வது வழக்கமாம்எதற்கு? அப்படிக் கட்டிக்கொண்டால் அது அவரின் அழகைப் பாதுகாக்கும் என்று நம்பினாராம். அதற்காக இப்போது உள்ளவர்கள் யாரும அப்படிச்செய்யவேண்டாம. கம்பியை எடுத்துத் தலையில் சுற்றிக்கொண்டு தெருவில் நடந்தீர்களென்றால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள? சந்தேகப்படுவார்கள்.

இப்போது நான் சொல்ல வந்ததுஎன்னவென்றால், உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு காந்தசக்தியைஉபயோகப்படுத்துகிற முறைவெகுகாலமாகவேஇருந்துகொண்டிருக்கிறது. இப்போதும் கூட இடுப்பிலே-கையிலே மணிக்கட்டிலே தாமிரக் கம்பியைக் கட்டிக்கொள்கிறவர்கள்இருக்கிறார்கள். அதனால் இரத்த அழுத்தம் குறைகிறதென்று கூடச் சொல்கிறார்கள்.

ரஷ்யாவிலும், ஜப்பானிலும் வெகுகாலமாகவே காந்தசக்திகொண்ட கழுத்துச் சங்கிலி, இடைவார், பட்டைநாற்காலி ஆகியவற்றை உபயோகப்படுத்தி ஆஸ்துமா, இரத்த அழுத்தம் மூட்டுஅழற்சி, முடக்குவாதம், சிறுநீரககல் ஆகியவற்றுக்கெல்லாம சிகிச்சை கொடுக்கிறார்களாம். காந்த சக்திகொண்ட தண்ணீரை உபயோகப்படுத்திக் கூட சில நோய்களைத் தீர்த்துவைக்கிறார்களாம். விஞ்ஞான பூர்வமாகப்பார்க்கிறபோது நமது உடம்பில்இருக்கிற ஒவ்வொரு 'செல்' லும் ஒரு 'மின்அலகு' அதற்கென்று ஒருகாந்தத்ளம் ஒவ்வொரு உறுப்பைச் சுற்றியும் இருக்கிறது. இதிலிருந்து உடன்பாடுஎதிர்மறை (பொசிட்டிவ் - நெகட்டிவ்) நிகழ்வுகள் வெளிப்படுகின்றன அதாவதுநேர்அயனிகள்-எதிர்மின் அயனிகள், இந்த இரண்டும் வெளிப்படுகிற அளவு சமநிலை,தரம் ஆகியவற்றைப் பொறுத்து உடம்புநன்றாக இருக்கிறது அல்லது நோய் உண்டாகின்றது.

இரத்தத்தில் இரும்புச்சத்து இருக்கிறது. அதில் காந்த தளம் செயல் படுகிறபோது இரத்த ஓட்டத்துக்கு ஒரு ஊக்கம கிடைக்கிறது. புரோட்ட பிளாசத்தை அயனீகரமாக்கி வளர்ச்சி மாற்றத்தை ஊக்கப் படுத்துகிறது. பல திசுக்களின் வழியாக மின்னோட்டம் போகிறபொழுது, கொலஸ்ட்ரால், கல்சியம், யூரியா, சிறு நீரகக்கல் ஆகியவற்றின் மேல் செயல் புரிந்து வேண்டாத கழிவுப் பொருளை சிறு நீர் மூலமாக வெளியேற்றி விடுகிறது. இப்படித்தான் காந்த சக்திச் சிகிச்சை முறை பற்றி அது சம்பந்தமான டாக்டர்கள் விளக்கம் கொடுக்கிறார்கள்.

காந்தசக்தி சிகிச்சையை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். ஒன்று தல சிகிச்சை, ( Local Therapy) இரண்டாவது பொது சிகிச்சை, மூன்றாவது காந்த சக்தி கொண்ட தண்ணீர் மூலமாகக் கொடுக்கிற சிகிச்சை, மின்னோட்டத்தையும், காந்த சக்தியையும் ஒன்றாகச் சேர்த்து 'மின்காந்த சிகிச்சைமுறை' என்ற ஒன்றை சோவியத் நாட்டில் கண்டுபிடித்திருந்தார்கள். லேசர் சிகிச்சையாலும், அறுவை சிகிச்சையாலும் குணமடையாத இரைப்பைப் புண்ணை இந்த மின்காந்த அலைகள் மூலமாக தீர்த்து வைத்து விடுகிறார்களாம்.

மின்சக்தி சிகிச்சை என்பது ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிறது

1987 ல் ஜெனிய அயிர்டன் என்கிற ஒரு 15 வயதுப்பெண் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு உலக சாதனையை ஏற்படுத்தினாள். கொஞ்ச நாளில் அந்த பெண்ணுக்கு இடது காலில் ஏதே ஒரு வலி ஏற்பட்டதாம், அதனால், அதன்பின் சில போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாமல் போய் விட்டதாம். அதைச் சரிப்படுத்த என்னென்னவோ சிசிச்சைகளெல்லாம் கொடுத்துப் பார்த்தார்களாம். சரியாக வரவில்லை, கடைசியாக MET மூலமாகக் குணப்படுத்தினார்களாம். அதாவது நுண்மின் சிகிச்சை மூலம், தலைவலி, இடுப்புவலி, கால் சுளுக்கு, முதுகுவலி, கழுத்து வலி இவற்றுக்கெல்லாம் இந்தச் சிகிச்சை உடனடியாகப் பலன் கொடுப்பதாக அமெரிக்க பாஸ்டன்பல்கலைக் கழக,

மருத்துவத்துறை அறிக்கை சொல்லுகிறது. இம்மின்சிகிச்சையும்- காந்த சிகிச்சையும் சேர்ந்தது தான் மின்காந்த சிகிச்சை.

வருங்காலத்தில் இது போன்ற மருந்தில்லாத வைத்திய முறைகள் மிகவும்பிரபலமாக ஆகும் போல இருக்கிறது: அப்படியானால் அது நல்லது தான். ஏனென்றால், மருந்துகளின் விலையும் அதிகமாக இருக்கிறது. அத்துடன் பக்க விளைவும் அதிகமாகவிருக்கிறது. ஒருவியாதிக்கு கொடுக்கிற மருந்து அதைத் தீர்த்து விட்டு இன்னொரு வியாதியை உண்டாக்கி விட்டுப் போய் விடுகிறதே!

மனிதனைச் சுற்றி மட்டுமில்லை, செடி, கொடி, புழு, பூச்சி, விலங்குகள் எல்லாவற்றையுமே சுற்றிக் கொண்டு, ஒருபோர்வை மாதிரி மின்காந்த சக்தி இருக்கிறதென்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருகாந்தத்துக்கு இரண்டு துருவங்கள் உண்டு. ஒன்று வடக்கு, இன்னொன்று தெற்கு, இப்போது உடம்பில் ஒருபகுதியில் தாங்க முடியாதவலி உண்டாகிறது என்று உதாரணத்துக்கு வைத்துக்கொள்ளுங்கள். வலியுள்ள இடத்திலே தென்துருவத்தையும், வடதுருவத்தைப்பாதிக்கப்பட்ட பக்கத்துக்கு எதிர்ப் பக்கத்திலும் வைத்தால்நல்ல பலன் கிடைக்கிறதாம்;

'உங்கள் வீட்டிலும் காந்த சிகிச்சை முறை நல்ல பலன் கொடுக்கிறது சார்! என்றார் நம்மைச் சேர்ந்த ஒருவர். 'எப்படி? என்று கேட்டேன்,' பொதுவாக உலகத்திலே கணவன் மனைவி இரண்டு பேரும் எதிர் எதிர் துருவமாக இருக்கிறார்கள் என்று சொல்வது உண்டு. ஆனால் நாங்கள் அப்படி இல்லை சார். எங்கள்வீட்டில் இரண்டு பேருமே ஒரே துருவமாக இருக்கிறோம். அதனால் 'எங்களுக்குள் வம்பே வருவதில்லை!' என்று பெருமையாகச் சொன்னார். ஆச்சரியமாக 'அது எப்படி?' என்று கேட்டேன். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை சார்! காந்தத்தில் ஒரே துருவம்கவர்வது இல்லையே... அதனால் எங்கள் வீட்டில் ஒரு துருவம் சண்டைக்காக நெருங்கி வந்தால் ...இன்னொன்றும்அதே துருவமாக இருப்பதனால், உடனேவிலகிஎட்டத்தில்ஓடிப் போய் விடும். என்று விளக்கம் கொடுத்தார் அவர். ★

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஐ. தே. மு வின் பிரேரணையை எதிர்த்து ஜனாதிபதி அறிக்கை

(கொழும்பு)

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணைச் சட்டத்தை செல்லுபடியற்றதாக்கும் ஐ.தே.மு வின் பிரேரணையை ஜனாதிபதி எதிர்த்துள்ளார்

இதனை எதிர்த்து அவர் அமைச்சரவைக்குகடந்தபுதன் அன்று சமர்ப்பித்தகுறிப்பில், இவ்விடயம் பற்றிஆராய்வதற்கு ஜனாதிபதியாலும் பிரதமராலும் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அவரது குறிப்பில் மேலும், இந்த சட்டத்தை பயன்படுத்தி ஐ. தே. க தனது இலக்குகளை அடைந்திருக்கிறது. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகளை பறித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமல் செய்வதற்கு சட்டம் பயன்பட்டது.

இதனை அரசியற் சட்ட அறிஞர் தொல்வின் ஆர். டீ. சில்வா 'நீதிநிர்வாக அமைப்பை கேலிசெய்யும் சட்டம்' என விமர்சித்திருந்தார்.

இச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 1978 ஆம் ஆண்டு காலத்தில் இதனை ஆதரித்தவரான இன்றைய நீதியமைச்சர் லொக்கு பண்டார, சட்டம் எதற்காக இயற்றப்பட்டதோ அது நிறைவேறிவிட்டதால் இன்று எதிர்க்கிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் திலக் மாரப்பன கருத்து தெரிவிக்கையில் கடந்த காலத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் காலத்தை விரயமாக்கின: பயன்களை தரவில்லை என்று கூறி விஜயகுமாரதுங்க, டென்சில் கொப்பேகடுவ, சிறிசேனகூரே போன்ற விவகாரங்களை உதாரணமாக கூறினார்.

பிரதமர் கருத்து தெரிவிக்கையில், இக்குழுக்களின் சிபார்சுகளை அமுல் செய்ய மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்.

ஆனால்,இன்றைய தேர்தல் முறையில் அது சாத்தியமானதல்ல. இந்தச் சட்டமும் அர்த்தமற்றது என்றார். அமைச்சர் சொக்ஸி, இது செத்த எலிக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு கூட பயன்படாது. ஆனால் சிலருக்கு எதிராக நற்பெயரை கெடுக்கும் பிரசாரத்திற்கே உதவக்கூடியது என்று குறிப்பிட்டார்.

(உ)

# இராசி பலன்

10 - 08 - 2002
(ஆடி 25, சனி)
துதியை மு. இ. 9.15 வரை
மகம் பி. ப. 2.03 வரை
ராகுகாலம்-9 04-10.34
நல்லநேரம்- 3.04-4 34
அமிர்தசித்தம்

**மேடம்**

வியாபார நன்மை, கௌரவக் குறைவு, உடல் நலக் குறைவு, காரிய தாமதம்.

**இடபம்**

கல்விச் சிறப்பு, அற்பர் உறவு, திடீர் நன்மை, வாகன பயம்.

**மிதுனம்**

கூட்டு முயற்சி, தன வரவு, பிரயாண நன்மை, மன மகிழ்ச்சி.

**கடகம்**

மனக்கிலேசம், முயற்சி தாமதம், வாக்கு வன்மை, பெண்கள் நட்பு.

**சிங்கம்**

நண்பர்கள் உதவி, சென்ற இடத்தில் மதிப்பு, கற்பனை மிகுதி, முயற்சி பலிதம்.

**கன்னி**

கோபப்படுதல், சுப காரியச் செலவு, எதிர்பாராத நன்மை, பிரயாணம்.

**துலாம்**

குடும்ப நன்மை, காரிய நன்மை, நிலை மாற்றம், போசன சுகம்.

**விருச்சிகம்**

செய்தொழில் விருத்தி, பிறர் உதவி, மேன்மை, காரிய அனுகூலம்.

**தனுசு**

ஆன்றோர் மதிப்பு, சிறு வியாதி, தேவையற்ற அச்சம், முயற்சி தாமதம்.

**மகரம்**

பிரயாண பயம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல், போசன சுகம்.

**கும்பம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை.

**மீனம்**

ஆரோக்கியம், செய்தொழில் முன்னேற்றம், காரிய நன்மை, சுவாரஸ்யம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# பொதுநலவாய நாடுகள் போட்டியில் இலங்கை கோட்டைவிட்டது

(சுண்டுக்குளி)

மன்செஸ்டரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் பங்குபற்றிய போட்டிகளில் இலங்கை வீர வீராங்கனைகள் எவரும் பதக்கம் ஒன்றைக்கூட பெறாமல் வெறுங்கையுடன் நாடுதிரும்பியுள்ளனர்.

இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரமான குறுந் தூர ஓட்ட வீராங்கனைகூட 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் மயிரிழையில் 3 ஆம் இடத்தைக் கோட்டைவிட்டுள்ளார்.

மேலும் 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில்கீற்ஸ்முதலாம் இடத்தை பெற்றிருந்த சுசந்திகா, இறுதிஓட்டத்தில் சுவடு மாறிஓடி பதக்கம்கிடைக்க இருந்த அரியவாய்ப்பை இழந்தார்.

பொதுநலவாய போட்டியில் பதக்கங்கள் பெறாவிட்டாலும் ஆசியபோட்டியில் பிரசன்னா அமரசேகராசுகததிலகரத்தின, ஷேறாதன் பறடீப்குமாற, விமலவானசபி. அலுடெனியா, எம். கெமன்தா, யொய்டானுகா, டனுசகா, சின்னதகாட் சொயிசா, கே. எஸ். மென்டிஸ், றவிந்திரகுமார், பி. அனுடெனியா, எம். கெமின், சிறியாணி குலவான்சே, சுசந்திகா ஜெயசிங்க ஆகியோர் பதக்கங்களைப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் வெகுவாக உள்ளதாக ஏ. ஏ. ஏ. தலைவர் சுனில் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை ரூபாவாஹினிக்கே வழங்கப்பட்டுள்ளது. தமிழில் வர்ணனைகளை எம். என். ராஜா, எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட், திருமதி வசந்தி யோசப், எஸ். சலாவுதீன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(ஷ-110)

# சிறார் அபி. திட்டங்களை முன்னெடுக்க ஒப்பந்தம்

(சுதுமலை)

இலங்கையில் 5 வயதுக்குட்பட்டசிறுவர்கள்தொடர்பான அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக யுனிசெவ் நிறுவனமும் ஹேமாஸ் சந்தைப்படுத்தல் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம்ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென ஹேமாஸ் சந்தைப்படுத்தல் நிறுவனம் 45 லட்சம்ரூபாவைஇவ் வருடம் ஒதுக்கியுள்ளது.

குழந்தைகளின் உய்த்துணரக்கூடிய பௌதிக சமூக உணர்வுபூர்வ மேம்பாடுகளை உறுதி செய்யும்விதத்தில்குழந்தைகளின் முழுத்திறன்களையும் அபிவிருத்தி செய்வதே இத்திட்டத்தின் இலக்காகும்.

இதன் ஊடாக இலங்கையில் உள்ள5வயதுக்குட்பட்டகுழந்தைகளின் விடயத்தில் விசேட கவனம்செலுத்தப்படும்என்று யுனிசெவ் வட்டாரங்கள்தெரிவித்தன.

(உ-252)

# 62 யுத்த நிறுத்த மீறல்கள் இதுவரை பதிவாகின

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின் 62 யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி 62 யுத்தநிறுத்த மீறல்களில் விடுதலைப்புலிகள் 36யுத்தநிறுத்தமீறல்களையும் அரசு 26 யுத்தநிறுத்த மீறல்களையும் பதிவுசெய்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

## வங்கிகள் முன்பாக மறியல் போராட்டம்

(கொழும்பு)

வங்கிகளைத் தனியார் மயமாக்குவதைக் கண்டித்து கடந்தபுதன்கிழமைகொழும்பு நகரில் உள்ளவங்கிகளின் முன்பாக வங்கிஊழியர்கள்மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மக்கள்வங்கியின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக நண்பகல் 12.30 மணிமுதல் 1·30மணிவரை வங்கிஊழியர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(ம)

# 20 இலட்சம் வெளிநாட்டவர்க்கு பிரிட்டனில் வதிவிட விசா வழங்க நடவடிக்கை

(லண்டன்)

வருடா வருடம் 2 இலட்சம் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட விசாக்களைவழங்கவுள்ளதாக பிரிட்டனிலுள்ள அரசாங்க சார்பற்ற அமைப்பான மின்ரேஸஸ் வோச் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் வாழவிரும்பும் லட்சக்கணக்கான மக்கள் பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடு ளில் இருந்து சட்டவிரோதமாகச் செல்கின்றனர். இத்தகைய பிறநாட்டவரின் முயற்சிகளை குறைக்கும் நோக்குடனேயே பிரிட்டன் வருடா வருடம் 2இலட்சப்பேருக்குவிசாக்களைவழங்கவுள்ளது.

2001 ஆம் ஆண்டில்பிரிட்டனில் குடியேறுவதற்கு 90 ஆயிரம் பேர்உத்தியோகபூர்வமாக முயற்சித்திருந்தும் இவர்களில் 40 சதவீதமானவர்களுக்கே வதிவிட விசாக்கள் வழங்கப்பட்டன.

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் மொத்தம் 20 இலட்சம் வெளிநாட்டவர்களுக்கு பிரிட்டன் வதிவிட விசாவழங்கவுள்ளது என மின்ரேஸஸ் வோச் நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-3)

# கீரிமலைக்குச் சென்ற பக்தர்கள் மீது படையினர் உடற் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினமான நேற்று முன்தினம் பெருமளவிலான மக்கள் கீரிமலைக்குச் சென்று பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

கீரிமலைக்கு தெல்லிப்பழை சோதனைச் சாவடி ஊடாகச் சென்ற பொதுமக்களை அடையாள அட்டை பரிசோதனைக்கு உட்படுத்தாத படையினர் உடற் பரிசோதனைகளுக்கு உட்படுத்திய பின்னரே அவர்களை கீரிமலைக்குச் செல்வதற்கு அனுமதித்தனர்.

கீரிமலையில்தீர்த்தக் கேணியிலும், கடலிலும் நீராட பக்தர்களை அனுமதித்த கடற்படையினர் குறித்த எல்லைக்கு அப்பால் அவர்களைச் செல்லவிடாது தடுத்ததுடன், இரண்டு படகுகளில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வலி-வடக்கு பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற வலி. வடக்கில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான உயர்மட்ட மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, ஆடி அமாவாசை தினத்தன்று எந்த வித பாதுகாப்புக் கெடுபிடியும் இன்றி மக்கள் கீரிமலைக்குச் சென்று வரலாம் என உறுதிப்பாடு வழங்கியமை தெரிந்ததே. (5-5

# கொலம்பியாவில் குண்டு வெடிப்பு 15 பேர் பலி; பலர் படுகாயம்

(பொஹேரா)

கொலம்பியாவின் தலைநகரான பொஹேராவில் நேற்று முன்தினம் நடந்த குண்டுத் தாக்குதலில் 15பேர் கொல்லப்பட்டதுடன், 40இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளார்.

கொலம்பியக்வின் அதிபர் மாளிகையில், புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நடைபெற்றுக்கொண்டிருந்தசமயம் மாளிகையிலிருந்து சுமார் 400 கிலோ மீற்றர் தூரத்திலேயே இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

கொலம்பியாவின் முக்கிய ஆயுதக் குழுவான மாக்ஸிஸ புரட்சிய ஆயுதக்குழுவே இந்த் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அந்நாட்டு பாதுகாப்பு வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

கொலம்பியப் பொலிஸார் மற்றும் 20 ஆயிரம் படைவீரர்கள் அமெரிக்காவின் கண்காணிப்பினர் ஆகியோரின் அனைத்து பாதுகாப்புக்களையும் மீறி இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளதாகசுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதிபர் மாளிகையை அண்டிய ஏனைய மூன்று இடங்களிலும் நேற்றுமுன் தினம் இடம்பெற்றகுண்டுவெடிப்புச் சம்பவங்களில் 4 காவல்படையினர் இறந்துள்ளனர்.

எஸ்.பி.ஆர்.சி. எனப்படும் சுமார் 17ஆயிரம் கெரிலாக்களை கொண்ட கொலம்பிய புரட்சிக்குழுவினர் அரசை எதிர்த்து கடந்த 1964ஆம் ஆண்டு முதல் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மண் சரிவினால் 20 பேர் பலி

(அல்மாஅட்டா)

சஜஸ்தான் கிராமமொன்றில்கடந்தசெவ்வாய்க்கிழமை ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலைப் பிரதேசத்திலிருந்த ஏரி ஒன்று நீர் நிரம்பி வழிந்ததனாலேயே இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவினால் மூடப்பட்டிருக்கும் அக்கிராமத்தை மீட்பு பணியாளர்கள் மீட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-8)

# ஆமை இறைச்சியுடன் பாசையூர் வாசி கைது

(யாழ்ப்பாணம்)

ஆமை இறைச்சியை விற்க முயன்றவேளை பாசையூரைச் சேர்ந்த நபரொருவர் பொலிஸாரிடம் கையும் மெய்யுமாகச் சிக்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுமார் 5 கிலோ கிராம் இறைச்சியுடன் அகப்பட்ட இந் நபரைப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

ஆமையை இறைச்சிக்காகக் கொல்வது தண்டனைக்குரிய குற்றம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஷ19)

## பதிவேடுகளைப் பெறுக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் அலகில் இறுதியாக விண்ணப்பித்த மாணவர்கள் அனேகர் இதுவரை பதிவேடுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும், அவ்வாறு பெற்றுக் கொள்ளாதவர்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு அறிவித்துள்ளது. (ஷ-19)

## இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான தேர்த் திருவிழா இன்றாகும்.

புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நேற்று மாலை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஷ)

# ஒட்டிப் பிறந்த பெண் குழந்தைகள் வெட்டிப் பிரிப்பு

(வாஷிங்டன்)

தலை ஒட்டிப் பிறந்த இரட்டைப் பெண்குழந்தைகள், 22 மணிநேர சத்திர சிகிச்சைக்குப் பின் பிரிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க வைத்தியர்கள் இச் சாதனையைச் செய்துள்ளனர்.

ஆனாலும், இக்குழந்தைகளில் ஒன்றின தலையில்இரத்தக் கசிவு ஏற்பட்ட காரணத்தால் மீளச்சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது.

50 பேர்கொண்டமருத்துவர் குழு இச் சத்திர சிகிச்சையை மேற்கொண்டது.

இக் குழந்தைகளின் மூளைகள், மண்டை ஓடுகள் தோள்கள் என்பனவே இச்சத்திர சிகிச்சையின் போது வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டன. (உ)

## ஆலய உற்சவத்தில் தாலிக்கொடி களவு

(உடுவில்)

ஆலய வழிபாட்டிற்குச் சென்ற பெண்மணியின் கைப்பையில் இருந்த பெறுமதிவாய்ந்த தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர் உற்சவத்தன்று உடுவிலைச் சேர்ந்த திருமதி திருச்செல்வம் என்பவரது தாலிக்கொடியே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-261)

# யாழ் நகரப்பகுதி போக்குவரத்துச் சீரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதிப் போக்குவரத்துச் சீரமைப்பு தொடர்பான முக்கிய கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

கடந்தவியாழனன்று யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானமை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் :

ஏ-9 தரைவழிப்பாதை திறப்பையடுத்து குடாநாட்டில் குறிப்பாக யாழ். நகரப்பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல், அதனை தீர்க்கும் வழிமுறைகள் ஆகியன குறித்து இதில் விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி கூட்டத்திற்கு யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகள், வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர், முச்சக்கர வண்டி, சிற்றூர்திச் சங்கங்களின் தலைவர்கள், யாழ். மாநகரசபை ஆணையாளர், வடபிராந்திய போக்குவரத்து ஊழியர் சங்கம்- தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத் துறையினர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-6)

# ஐந்து நகரங்களில் நடமாடத் தடை

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தில் உள்ள 5 நகரங்களில் பொதுமக்களின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சஹாப் நகரில் பலஸ்தீனப் போராளிகள் நடத்திய தாக்குதலில் 9 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்தஅறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜெமின், டொல்ஹாம், நெவுலு, ஹெல்ஹிப்யன் றமழா ஆகிய 5 நகரங்களிலுமே பொதுமக்களின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் அவசர தேவைகள் கருதியே மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியே வரலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் போராளிக் குழுக்கள், இஸ்ரேலியர்மீதான தாக்குதல்களை அதிகரித்துள்ள நிலையில், அவர்களுடனான அதிகாரபூர்வ பேச்சுவார்த்தைகள் அனைத்தையும் நிறுத்திவைப்பதாகவும் இஸ்ரேலிய அரசு அறிவித்துள்ளது. (உ-8)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி சனசமூக நிலைய பாலர் கல்விநிலைய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப.2 00 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் எஸ். நடராஜலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# படையினர்விட்டுச் சென்ற பொருட்களை உரிமைகோரி பொதுமக்கள் மோதல்

(காரைநகர்)

காரைநகர் ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, மற்றும் தனியார் வீடுகளில் முகாமிட்டிருந்த கடற்படையினர் கடந்த வாரம் அவற்றைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, படையினர் விட்டுச் சென்ற தளபாடப் பொருட்களை எடுத்துச் செல்வதில் பொதுமக்கள் நாட்டங்காட்டி வருகின்றனர்.

கடற்படையினர் ஆட்கள் இல்லாத வீடுகளில்எடுத்ததளபாடப்பொருட்களை அவ்விடத்தே விட்டுச் சென்றதனால் பொதுமக்கள் அவற்றிற்கு உரிமை கொண்டாடுவதுடன் இதனால் மக்களிடையே மோதல் சம்பவங்களும்இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு மோதல்களில் ஈடுபட்டோர் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (உ-246)

# அதிக நறுமணம் மிக்க மலர்களைப் பார்க்க மக்கள் கூட்டம்

(லண்டன்)

உலகத்திலேயே அதிக நறுமணம் மிக்க மலர்கள் தற்போது மலர்ந்துள்ளன.

லண்டனில் உள்ள தாவரவியல் பூங்காவில் பூத்துள்ள இவ்இன இரு வாசனை மிக்க மலர்களைப் பார்க்க பெருந்தொகை மக்கள் செல்கின்றனர்.

அபூர்வமாகப் பூக்கும் இந்த மலர் 1889ஆண்டு இந்தமலர் முதல் தடவையாக மலர்ந்ததாகவும், அதன் பின்னர் 10 தடவைகளே மலர்ந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (உ)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கே. சி. சி. சி. வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை காலை 8.30 மணிக்கு பற்றீசியன் வி. க. எதிர் மானிப்பாய் பரிஸ் வி. க., பி. ப. 1.00 மணிக்கு அரியாலை வி. க. எதிர் யாழ். பல்கலைக் கழக அணி ஆகியன மோதவுள்ளன. (உ-3)

## இடமாற்றம்

(சண்டிலிப்பாய்)

குட்டியப்புலம் உபதபாற் கந்தோர் தற்போது தற்காலிகமாக சுன்னாகம் தபாற் கந்தோரில் இயங்கிவருகிறது. (உ-263(

அகலாது அணுகாது தீக்
காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்
தொழுகுவார்
குறள்

வலம்புரி

## விபத்துகளின் அதிகரிப்பு

யாழ், மாவட்டத்தில் வாகனங்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அதேபோல் யாழ் நகரில் கூடுகின்ற மக்களின் தொகையும் பன்மடங்கு கூடியுள்ளது.

எனினும், இதற்கேற்றாற்போல் வீதிகள் எதுவும் விஸ்தரிக்கப்படவோ அல்லது புதிய வீதிகள் எதுவும் அமைக்கப்படவோ இல்லை'

மாறாக ஏற்கனவே இருந்த வீதிகளும் படையினரால் மூடப்பட்டுள்ளது. இந்நிலையில் வீதி விபத்துக்கள் இடம்பெறுவது சர்வசாதாரணமே.

இதன் ஒரு வெளிப்பாடாகவே நேற்று முன்தினம் யாழ்ப்பாண பஸ் நிலைய மையத்தில் இடம்பெற்ற விபத்துச்சம்பவம் அமைந்துள்ளது. பஸ் நிலையத்தின் மையப்பகுதியில், ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்க அப்பாவிக் குடும்பஸ்தர் ஒருவர் பஸ்சினால்நசியுண்டு இறப்பது என்பது மிகவும் வேதனைக்குரியசம்பவமாகும். இத்தகைய மனதை உருக்கும் சம்பவங்கள் நடைபெறுவதற்கு,பலகாரணங்கள் இருக்கமுடியும். குறிப்பாக குறித்த சாரதியின் பொறுப்பற்றதன்மை - சாரதிக்கான போதிய பயிற்சியின்மை, பஸ்நிலையச் சுற்றுக்குள் துவிச்சக்கர வண்டியுடன் மரணமான நபர் நுழையும்போது அதனைத்தடுத்து நிறுத்தாத பாதுகாப்பூழியர்களின் அசமந்தம் பொதுமக்கள் மத்தியில்நிலவும் வீதி விதிகள் பற்றிய போதிய அறிவின்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இத்தகைய நிலைகளில் மேற்படி விபத்து இடம்பெற வாய்ப்பிருப்பினும், சாரதியின் பொறுப்பற்ற மனித உயிர்களை மதிக்காத தன்மை முதன்மை பெறுகிறது.

இதேவேளை விபத்துச் சம்பவம் இடம்பெற்ற வேளை அங்கு கூடிநின்ற சிலர் சம்பவத்தோடு தொடர்பில்லாத சாரதி மற்றும் நடத்துநர்களை தாக்கியுள்ளனர். இத்தகைய பொறுப்பற்ற செயலைச் செய்தவர்கள் ஆட்டோசாரதிகள் என பாதிக்கப்பட்ட தரப்பால் முறையீடுசெய்யப்பட்டுள்ளது. எதுவாயினும், விபத்தோடு சம்பந்தப்படாத சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தாக்கப்பட்டமை அறிவிலிகளின் செயலாகவே கருத முடியும்,

# கைத்தொழில் அபிவிருத்திப் பிரச்சினைகள் தீர

# தொழிலதிபர் - தொழிலாளர் நல்லுறவு அவசியம்

கலாநிதி
**வ. கணேசலிங்கம்**

ஈழத்தின் கைத்தொழில் அபிவிருத்தியை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள இரண்டுஉள்ளன. (அ) இலங்கை போன்றபின்தங்கிய நாடுகளில்நிபுணத்துவஅறிவும் கைத்தொழில் நுட்ப ஆற்றலும்போதிய அளவு இல்லாமையும். (ஆ இந்நாடுகளில் மூலதனம் இல்லாமையுமே அவையாகும். இவ்விரு பிரச்சினைகளுக்கும் ஓரளவிற்தீர்வு காண முடியும்என்பது பலரின் கருத்தாகும். இவை தவிர்ந்த மிகச்சிக்கலான சில பிரச்சினைகளும் உள- அவற்றை ஆராய்வோம்.

முதலீடும் நிபுணத்துவமும்

இலங்கை மக்கள அபிவிருத்தியடைந்து முன்னேறியுள்ள நாடுகளுக்குச்சென்றுதொழில்நுட்ப ஆற்றலும், நிபுணத்துவ அறிவும் பெறுவதுடன், அந்நிய நாடுகளிலிருந்து மூலதன உதவி பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்து விட்டால் மட்டும் நம் நாட்டில் கைத்தொழில் தடைகள் வேறுஎதுவும்இன்றி அபிவிருத்தி அடைந்து விடலாம் என்று கூற முடியாது. சுலபமாகத் தீர்வு காண முடியாத வேறு பிரச்சினைகளும் உள்ளன முதலாவதாக எவ்விதக் கைத்தொழில்களில்முதலீடு செய்தால் லாபம் கிடைக்கும், எவ்வகைப்பொருட்களை உற்பத்தி செய்து, மக்களுக்கு விநியோகித்தால் அதிக பயன் பெறுவார்கள் என்ற கேள்விகளுக்கு விடைகள் அளிக்கும் முறையில் நம்பொருளாதார அமைப்பின் அடிப்படைத் தத்துவங்களையும், அரசாங்கக் கொள்கைகளையும் ஆராய்தல் அவசியமாகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உள்ளன போன்ற ஒரு தன் முயற்சிப் பொருளாதாரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள முதலாவது கேள்விக்கு மக்களே விடையளிக்கும் வகையில் முயற்சிகள் நடைபெறும் ஆனால் இன்றைய சூழ்நிலைகளில், இலங்கை போன்றநாடுகளில் பொருளாதார முயற்சியில் பெரும் பகுதியை அரசாங்கமே மேற் கொண்டு நடத்துவதால், ஒருபகுதி மட்டுமேமக்களின் தன்முயற்சிக்கு அனுமதித்துள்ளதாக இருக்கின்றது. அரசாங்கம் இத்தகைய ஒழுங்கு ஏற்படுத்தியதற்குக் காரணங்கள் உண்டு.

தன் முயற்சியாளர்

தேச அபிவிருத்திக்கு அல்லது மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களை உற்பத்தி செய்தல், பெருமளவில் மூலதனம் முதலீடு செய்ய வேண்டிய தொழில்களை நிறுவுதல் போன்றதுறைகள் அரசாங்க முயற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவைதவிர்ந்த ஏனைய துறைகளில் மாத்திரம் தன் முயற்சியாளர் முதலீடு செய்யவும், கைத்தொழில்களை ஸ்தாபிக்கவும் முடியும். இவ்வகையிற் தன்முயற்சியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துறைகளின் விரிவு மிகவும் ஒடுக்கமானது என்பன மாத்திரம் அல்ல, அவர்கள் பிரச்சினை, அத்துறைகளில் உற்பத்தித் தொழில்கள் நிறுவுவதற்கு வேண்டிய அடிப்படை ஆராய்ச்சிகள் நடைபெறாமையே பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது. இத்துறைகளுள் அடங்கியுள்ள கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருட்கள் இந்நாட்டிலேயே கிடைக்குமா? இல்லாவிட்டாற் பதில் மூலப்பொருள்கள் தானும் கிடைக்குமா? உற்பத்தி செய்யப் போகும் பொருட்கள் முழுவதற்கும் இந்நாட்டிலேயே கேள்வி எற்படுமா? இல்லாவிட்டால் எத்தேசங்களுக்கு எந்த அளவில் ஏற்றுமதி செய்யலாம் என்பன போன்ற விபரங்கள் அடிப்படை ஆராய்ச்சிகள் மூலமே சேகரிக்கலாம். இவ்வகை ஆராய்ச்சியை தன்முயற்சியாளர்கள் தாங்களே மேற்கொண்டு நடத்த முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இக் குறைபாடு கைத்தொழில் அபிவிருத்தியில் முதலீடு செய்யவிரும்பும் முயற்சியாளரைப் பாதிக்கும் பிரச்சினையாக அமைந்துள்ளது.

மூலப் பொருட்கள்

இரண்டாவது பிரச்சினையாக இங்கே குறிப்பிடப் போவதும், முதலாவது பிரச்சினையுடன் தொடர்புள்ளதாக இருக்கின்றது. மக்கள் நாளாந்த வாழ்க்கையில் நுகர்ந்து பழகியுள்ள அநேக பொருட்கள சமீபகாலம் வரையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியானவையாகும். இப்போது அப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மூலப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்துதான் பெறவேண்டியிருக்கிறது. கோதுமை மா, சீனி, இரசாயனப் பொருட்கள், தோல்வகை, உருக்கு முதலியன இவ்வகை மூலப் பொருட்கள் எனலாம். இவைகளைப் போதிய அளவில் பிற நாடுகளிலிருந்து பெறுவதற்கு அந்நியச் செலாவணி கிடைப்பதில்லை, குறுகிய கால எல்லைக்குள் மேலே குறிப்பிட்டுள்ளன போன்ற மூலப் பொருட்கள் இலங்கையிற் கிடைக்கும் என்றும் கூறமுடியாது. இவ்விதமான சூழ்நிலையில் தன் முயற்சியாளர்கள் புதுக் கைத்தொழில்களில் முதலீடுசெய்வதற்குப்போதிய துணிவு இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் புதுக்கைத் தொழில்களில்முதலீடு செய்தால், இவர்களுக்கு அந்நிய நாட்டு மூலப்பொருட்கள போதியளவு பெறுவதற்கு அரசாங்கம் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கும்என்ற நம்பிக்கை உருவாவதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம்.

பெறுமதியும் தரமும்

மூன்றாவதாக, புதுக்கைத் தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் ஒரு பகுதியையேனும்பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் கிடைக்குமானால் அப்பொருட்களை ஏற்றுமதி செய்யுமுன், அவைகளின் தரம், பெறுமதி முதலியன பரிசீலனை செய்யப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்படுவதற்கு ஒரு தேசிய (பொது) நிறுவனம் இலங்கையில் இல்லாமை ஒரு பிரச்சினையாகிறது (பொது) ஒரு புதுக்கைத் தொழில் ஆரம்பகாலத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரம் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லமுடியாது, அதுவுமல்லாமல் உலக சந்தையில் இலங்கையின் புதுக்கைத் தொழிற்பொருட்களுக்கு ஒரு நிரந்தரமானகேள்வியை நாம் ஏற்படுத்தவிரும்பின் அந்நிய நாடுகளில் அப்பொருட்களை நுகர்வோர் அவைகளை விரும்பி வாங்கும் படி அப்பொருட்களின் பெறுமதியும் தரமும் அமைந்திருத்தல் அவசியம். இல்லாவிடின் இலங்கைப் பொருட்கள் மற்றும் நாடுகளுடன் போட்டியிட முடியாதவைகளாகி விடக்கூடும்.

அடுத்ததாக நாம் குறிப்பிட விரும்பும் பிரச்சினை, கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளின் மனப்பான்மையையும் தொழில் வளர்ச்சியில் அவர்களுக்குள்ள அக்கறைகளையும் சார்ந்ததாகும். அயலில் உள்ள மற்றும் பின்தங்கிய நாடுகளின் தொழிலாளிகளுடன் ஒப்பிடுமிடத்து. நம் நாட்டின்தொழிலாளிகள் ஒரு புறத்தில் ஆக்கசக்தி குறைந்தவர்களாகவும், மறுபுறத்திலும் ஊதிய உயர்வையே பெரும் குறிக்கோளாக உடையவர்களாகவும் இருத்தலினால் உற்பத்திப் பொருட்களின் ஆக்க விலைகள் அதிகமாகும் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இதனால் உள்நாட்டு நுகர்வோரின் நலன்கள் பாதிக்கப்படுவதுமல்லாமல், நம்நாட்டு உற்பத்திப் பொருட்கள் பிற நாடுகளில் போட்டியிட முடியாத நிலையும் ஏற்படலாம். நாம் இந்தப்பிரச்சினையைத் தீர்க்கவிரும்பின்தொழிலதிபர்களுக்கும் தொழிலாளிகளுக்கு மிடையில் சுமுகமான நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமாகின்றது.

நாம் மேலே குறிப்பிட்டவைகளை விட இன்னும்சில பிரச்சினைகளைஎடுத்துவிளக்கலாம், ஆனால் அவை அதிக முக்கியத்துவம் இல்லாதவைகளானபடியால் அவைகளை நாம்இச்சிறு கட்டுரையில்குறிப்பிட விரும்பவில்லை. ஆயினும் கைத் தொழிலில் ஈடுபடும் நோக்கம் உள்ளவர்களும், கைத்தொழில் அபிவிருத்தியில் அக்கறை உள்ளவர்களும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யின். மேலே குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளுள் அனேகமானவற்றிற்குத் தீர்வுகாணலாம் என்பது எமது நம்பிக்கையாகும். ●

## தினசரி தியானம்

### ஒன்று மட்டும் நிச்சயம்

எல்லோரும் அழியக் கூடியவர்களே. இளமை நிலை அற்றது. பிறப்பு, இறப்பு என்னும் சூழலில் அகப்பட்டுப் பல பிணிகளால் துன்பப் படுகிறீர்கள். சாதனை ஒன்றே உங்கள் தன்மையைத் தெய்வீகமாக மாற்றி, வீடுபேறு அடைய உதவும். செல்வம் உங்களுக்கு நிலையான பேரின்பத்தைத் தரமுடியாது. கடைசியாக ஒன்று மட்டும் நிச்சயம். ஆத்மாவை உணர்தலே உங்களைப் பிறப்பிலிருந்தும் இறப்பிலிருந்தும் விடுவிக்கும்.

-சுவாமி சிவானந்தர்

## பாராளுமன்றத்தை

ஆனால்இரண்டும் வேறுவேறு கட்சிகளாகவே இருக்கின்றன இந்நிலையில் இருசாராரும் இணைந்து செயற்படவேண்டும்.

நாட்டின் தலைவிஎன்ற முறையிலும் முப்படைகளின் தளபதிஎன்ற முறையிலும் அரசுடன் நான்இணைந்துசெயற் படவுள்ளேன் ஆனால் அரசதரப்பினரோ எனதுகட்சிக் காரர்களைப்பழிவாங்கும் நடவடிக்கைகளிலும் தாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதுடன் பெரும்அச்சுறுத்தலாகவும் இருந்துவருகின்றார்கள்.

1994ம்ஆண்டு முதல்நான் சமாதானத்துக்காக எடுத்து வந்த முயற்சிகளையே தற்போது அரசுஎடுத்து வருகிறது. இதனையிட்டு நான் மகிழ்ச்சி அடைவதுடன் எனது பூரண ஒத்துழைப்பையும் வழங்கிவருகிறேன்.

எனதுசமாதான முயற்சிகளை அன்று எதிர்த்தவர்கள் இன்று அதனை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் இதனையிட்டுநான்மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசும்விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உறுதிப்படுத்தப்படாத முக்கிய விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின்பும் விடுதலைப்புலிகள் இன்னமுப்வரி வேண்டுகிறார்கள். வங்கிகள் நடத்துகிறார்கள். காவல் துறைக்கு ஆட்களைத்திரட்டுகிறார்கள் இதுதொடர்பாக நான் பிரதமருக்கு தெரியப்படுத்தி உள்ளதுடன் பாதுகாப்பு அமைச்சின்கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன்.

அரசுக்கும்விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் இந்நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதான அம்சங்கள் இடம்பெற வேண்டும்.

அரசியல் யாப்பின் 17வது திருத்தத்திற்கு அமைவாக தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ்ஆணைக்குழுஎன்பன அமைக்கப்படும் வரை வன்செயல்கள் அற்ற வகையில் தேர்தல் நடத்துவதென்பது இயலாத விடயமாகும்.

இதேவேளை திஸ்ஸதெய்வேந்திரா சம்பள ஆணைக்குழுவின் சிபார்சை அமுல்படுத்துவதும் அவசியமாகும்.

தற்போதைய அரசாங்கம் பதவி ஏற்றகாலம் முதல் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருவதுடன் எதிர்க்கட்சியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும்இருந்துவருகிறது. ஊடக சுதந்திரமும் இந்த அரசினால் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் சில அமைச்சர்கள் மீது குற்றம் சுமத்திவருகிறார்கள். எனினும்நாட்டுமக்களின்

(2-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முறையை மாற்றி அமைக்க பிரதமர் ரணில் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் முறையினை மாற்றிய மைப்பது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா குழு ஒன்றை நியமித்துள்ளார்.

தற் போது நடை முறையிலுள்ள தேர்தல் முறையில் காணப்படும் குறை பாடுகளைக் கண்டறிந்து அவற்றில் மாற்றங்களை மேற்கொள்வதுடன், பாராளுமன்றத்தில் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாக நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ.ஜே.எம் லொக்கு பண்டா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையினை மாற்றிய மைக்க வேண்டுமெனக் கோரி பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்தின் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில் அனைவரும் ஏற்றுக் கொள ளக் கூடிய தேர்தல் முறை ஒன்றினை அறிமுகப் படுத்துவது தொடர்பாக அர சாங்கம் விரிவாக ஆராய்ந்து வருகின் றது.

இச் சந்தர்ப்பத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியினரும் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவ தற்கு முன்வந்துள்ளமை பாராட்டுக் குரியது என்றும் தெரிவித்துள்ளார்.(த)

# இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்படும்!

## அமைச்சர் மொறகொட தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம் தனியார் மயப்படுத்தப்பட வுள்ளதாக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரி வித்துள்ளார்.

இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தா பனத்தை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

அதேவேளை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தை தனியார் மயப்படுத்து வதன்மூலம் 15 ஆயிரம் பேர் வேலை யிழக்க நேரிடுமென ஜே.வி.பி பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டி யுள்ளார். (த)

எதிர்வரும் 12ம் திகதி யாழ்ப்பாணத்தில் பரியோவான் கல்லூரி அணியினருடன் மோதவுள்ள தர்ஸ்டன் வித்தியாலய கிரிக்கட் அணியினரை படத்தில் காணலாம்.



நிற்பவர்கள் (இ-வ): தீபால் த சில்வா, ஜீ அமரசிங்க, திலான் குணரத்தின, ஓசுக்க மாராஜ், ஜீவன் சாமிகர, திலக்க மஸ்முல்ல, சுமித்த வர்ணசூரிய, தினேஸ், ஆர் ஐ பாலசூரிய, ஓசுடி பெரேரா.

அமர்ந்திருப்பவர்கள் (இ-வ): சமித் இந்திக்க(அணித் தலைவர்), எம் ஜிடிபி ஜயவீர (அணியின் உதவி பொறுப்பாளர்), திகால் பெர்ணாந்து (அணியின் பொறுப்பாளர்), ஆர்.ரீ.எம்.ஜி வீரதுங்க(அதிபர்) மேஜர் மனோஜ் த சில்வா, (ஒருங்கிணைப்பு அதிகாரி),ஆர் எம் ஜயசேகர(உதவி அதிபர்)ஜயந்த அப்பொன்ஸ் (பயிற்றுனர்), அசீல குமாரசிங்க அணியின் உதவித் தலைவர்.

# Tender Notice

# பஸ் சாரதி பொலிஸில் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத் தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தின்போது பஸ் ஸை செலுத்தி வந்த சாரதி நேற்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத் தில் சரணடைந்துள்ளார்.

இவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொறுப்ப திகாரி பி.பெரேரா விசாரணைக்கு உட் படுத்திய பின்னர் யாழ் நீதி மன் றத்தில் ஆஜர்படுத்தினார்.

இவ் வழக்கு யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி இளங்கோ வன் முன்னிலையில் எடுத்துக் கொள் ளப்பட்டது.

இவ் வழக்கை விசாரணை செய்த நீதிவான் இவருடைய சாரதி அனு மதிப்பத்திரத்தினை இவ் வழக்கு முடியும் வரை இடைநிறுத்தி வைக் கும் படியும் இவரை எதிர்வரும் 21ம் திகதிவரை விளக்க மறியலில் வைக் கும்படியும் யாழ் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட் டார். (5,6)

---

**வருட...**

பாடல் அமைச்சின் ஊடகப் பிரிவுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தெலைபேசி இணைப்புக்கள் வழங்குவதற்கன நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கெள்ளப்பட்டு வரு வதாகவும் விரைவில் இணைப்புக் கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

---

**புலிகள்...**

பேச்சு வார்த்தையை உடனடியாக ஆரம் பிப்பிபதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு முன்னராக புலிகள் மீதான தடை நீக்கப்படு மென பிரதமர் உறுதியளித்துள் ளமை தெரிந்ததே என்றும் அமைச்சர் பெர்னாண்டோ கூறினார்.

அதே வேளை இந்தியாவில் தங் கியுள்ள தமிழ் அகதிகளை மீளவும்

# புனர்வாழ்வு அமைச்சில் ஊழல் விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

புனர்வாழ்வு அமைச்சில் இடம் பெற்ற ஊழல் சம்பவங்கள் தொடர் பாக விசாரனைகள் மேற்கொள் ளுமாறு பிரதமர் ரணில் விக்கிர மசிங்கா பணித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங் காவின் இந்த பணிப்புரையை பொது ஜன ஐக்கிய முண்னணி வர வேற் றுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவல கத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே பொதுஜன ஐக்கிய முண்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைப் பாராட்டினார்.

இச்செய்தியாளர் மாநாட்டடில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

கண்டிவீதி ஏ-9 பாதை புனரமை ப்பது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சில் ஊழல்கள் நடந்திருப் பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டி இருந்தமை தெரிந் ததே. (ம)

## தவில் வித்துவான் கனேசன் காலமானார்

(கொழும்பு)

பிரபல தவில் வித்துவான் கே. கணேசபிள்ளை நேற்றுக் காலமா னார்.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வித்துவான் கணேசன் இலங்கை யில் மட்டுமல்லாது இந்தியா, சிங்கப் பூர், அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிலும் பல தவில் கச்சேரி களை நடத்திப் புகழ் படைத்தவர். (ம)

## மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

*இன்று 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் அன்புசால் மாணவர்களுக்கு வலம்புரியின் கல்விப் பிரிவு தனது மனமார்ந்த வாழ்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது. பரீட்சையில் சித்தி எய்த இறை ஆசி அனைவருக்கும் உரித்தாகுக.*


## மொழி பெயர்ப்பாளர் தேவை

**ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழி பெயர்ப் பாளர்கள் தேவை**

தொடர்பு:-நேரில்

**வலம்புரி**
**15, வெள்ளாந் தெரு,**
**(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

*நிர்வாக உத்தியோகத்தர்.*



## லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்

சிறந்த முறையில் உங்கள்
- கண்களைப் பரிசோதித்து கண்ணாடி வழங்குதல்
- பல் கட்டுதல்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப்போடுதல்

போன்றவற்றை செய்து கொள்ள நீங்கள் என்றென்றும் நாடவேண்டிய இடங்கள்
லாவண்யா

கொடிகாமம் வீதி, நெல்லியடி, (லட்சுமி தியேட்டர் அருகில்)

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வைரவர் கோயில் முன்பாக)

# Tender Notice

Tenders are hereby called to supply and installation of Cold room at General Hospital, Jaffna to preserve medicines. Tenders will be accepted up to 30/08/2002 at 10.00 a.m. The specification of the cold room is given below:

Interior Casing : *Smooth aluminium, with clear protective coating hygienic and easy to clean.*

Door : *With grease - resistant plastic magnetic sealing surround, easy to replace, lookable, multi - Layer insulating glass door.*

Recirculating air cooling : *With cross flow blower cuts out automatically when door is opened.*

Cooling machine : *Compressor hermetically enclosed, with vibration proof mountings, energy saving low noise.*
*recording thermometer, for placing loosely inside applicance with waxed paper stripe, including paper rolls sufficient for 2 years.*

Dr. S. Sathurmugam,
Director,
G.H. Jaffna.

[C/4837]


பொன்னாண்டோ கூறினார்.

அதே வேளை இந்தியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை மீளவும் இலங்கைக்கு அழைத்துவருவது தொடர்பாக ஆலோசித்து வருகின்றோம். இது தொடர்பாக வெளி விவகார அமைச்சு ஆய்வு ஒன்றை மேற் கொண்டு வருகின்றது என்றும் அமைச்சர் கூறினார். அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தமிழக ஆளுநர் இராம மோகன்ராவை நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

இது இவ்வாறு இருக்க அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ எழுதிய "சொர்க் கத்தில் வீசும் அந்நியக் காற்று" என்ற நூல் புதுடில்லியில் வைத்து வெளியிடப்பட்டது. முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் நூலை வெளியிட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய குஜ்ரால்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் சுமுகமன தீர்வு கிட்டுமென தான் நம்புவதாகவும் இலங்கையில் நடை பெற்றுவரும் இன மோதல் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (த)


# வாடகைக்கு

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றி போய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:-**
**இராசையா சாவித்திரி**
**65, சிவன் பண்ணை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (5782)



(லட்சுமி தியேட்டர் அருகில்)

(ஆஸ்பத்திரி வைரவர் கோயில் முன்பாக)

நெல்லியடியில் பார்வையிடும் நாட்கள்
செவ்வாய், வியாழன், சனி நேரம்:-8.ப0 - 12.00 மணி



# T.R.R.O. JAFFNA

Vacancy exists at T. R. R. O. for the Post of Field Volunteers - Health Awareness Programme.

Qualifications : *G.C.E. A/L with Science subjects*

Age limits : *20 to 35 years*

Experience : *Good communication skill*
*Presentation skill*
*Leadership*
*Capacity to analyse social conditions and discover the forces that have caused them and corresponding ability to express ideas.*

*Closing date of application : 15th August, 2002*

*Applications should be addressed to :-*
The Chairman,
The Refugees Rehabilitation Organisation Ltd.,
106, 4th Cross Street,
Jaffna.

[C/4836]


-ப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.